**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**
முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2023 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 01 ஆம் நாள் வெள்ளிகிழமை
**இ.ம.எண்.06/2023 இன் அ.வ.எண்.246/2017**

1) G.முத்துலட்சுமி (இறப்பு)
2) பிரபா
3) மாணிக்கம்மாள் (எ) மாராத்தாள் (இறப்பு)
4) முத்துலட்சுமி
5) ராஜ்குமார்
6) பூவாத்தாள்
7) ராஜேஸ்வரி
8) பொம்முராஜ்
9) ரவிகுமார்
10) கமல சரஸ்வதி
11) கோபால்சாமி ... மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

/ எதிர் /

1) ராஜம்மாள்
2) N.ஆனந்தகுமார்
3) P.சித்திரை செல்வி ... எதிர்மனுதாரர்கள்/ வாதிகள்

இம்மனுவானது கடந்த 19.10.2023 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A.செங்குட்டுவன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.மகாதேவன், அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரை எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்...

**ஆணையுரை**

கடந்த 17.07.2023 தேதியில் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பித்த ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்து உத்தரவிட கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 13 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள் ஆவர். அசல் வழக்கானது எதிர்மனுதாரர்களால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் இதர பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கானது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய பட்டியலிடப்பட்டிருந்தது. மனுதாரர்களின் வழக்கறிஞர் மனுதாரர்களிடம் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வழக்கு பட்டியலிடப்பட்டிருந்ததை தெரிவித்தார். அந்தசமயம் மனுதாரர் வைரஸ் காய்ச்சலால் எங்கும் செல்லமுடியாமல் படுத்தபடுகையாக இருந்ததால், மனுதாரரால் அவரது வழக்கறிஞரை சந்திக்க இயலவில்லை. அதனால், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கடந்த 17.07.2023 அன்று தோன்றாதரப்பினர்கள் ஆக்கப்பட்டுள்ளார்கள். மனுதாரர்களுக்கு வழக்கில் நல்ல எதிர்வாதம் உள்ளது. மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, கடந்த 17.07.2023 தேதியில் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பித்த ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்து உத்தரவிட கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **எதிர்மனுதாரர்கள் தரப்பில்,** மனுதாரர்கள் வேண்டுமென்றே கடந்த 17.07.2023 அன்று விவரப்பத்திரிக்கை தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு, இவ்வழக்கை கவனித்து வந்த 2ம் எதிர்மனுதாரருக்கு வைரஸ் காய்ச்சல் ஏற்பட்டது என்று பொய்யாக கூறியுள்ளார்கள். மேற்படி 2ம் எதிர்மனுதாரருக்கு வைரஸ் காய்ச்சல் எப்போது ஏற்பட்டது, அவர் எப்போது குணமடைந்தார் போன்ற எந்த காரணங்களையும் மனுவில் குறிப்பிடவில்லை. அதற்கான ஆதரவு எதனையும் இம்மனுவுடன் மனுதாரர்கள் தாக்கல் செய்யவில்லை. மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ஒருதலைபட்ச உத்திரவினை ரத்து செய்ய கோர மனுதாரர்களுக்கு எவ்வித முகாந்திரங்களும் இல்லை. எனவே, இம்மனு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**4)** இரு தரப்பிலும் தாக்கல் செய்யப்பட்ட மனு மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டது. இரு தரப்பிலும் எந்த ஒரு ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை.

**5)** இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

**6)** <u>**பிரச்சினை**</u> :

இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட சங்கதிகள் மற்றும் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் எதிருரை ஆகியவற்றை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்ததில், 1 முதல் 7 மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததால் கடந்த 17.01.2018 அன்று தோன்றாதரப்பினர்கள் ஆக்கப்பட்டுள்ளார்கள். இதற்கிடையில் 1ம் பிரதிவாதி இறந்ததால் அவரது வாரிசுகள் 8 முதல் 11 பிரதிவாதிகளாக கட்சிசேர்க்கப்பட்டுள்ளார்கள். கடந்த 17.07.2023 தேதியன்று 8 முதல் 11 மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வழக்கு பட்டியலிடப்பட்டிருந்தது. அன்றைய தினம் 8 முதல் 11 மனுதாரர்கள்/பிரதிவாதிகள் முன்னிலையாகாததாலும் அவர்கள் தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் செய்யாமல் இருந்ததாலும் மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்கள் ஆக்கப்பட்டுள்ளார். இந்நிலையில், மேற்படி தேதியில் இவ்வழக்கை கவனித்து வந்த 2ம் மனுதாரர் தனக்கு வைரஸ் காய்ச்சல் ஏற்பட்டிருந்த காரணத்தினால் தனது வழக்கறிஞரை சந்தித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்ய தேவையான தகவல்களை அளிக்க இயலவில்லை என்றும் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் காரணம் கூறப்பட்டுள்ளது.

**7)** இவ்வழக்கை பொருத்தவரை இந்நீதிமன்றமே முதற்கட்ட விசாரணை நீதிமன்றம் ஆகும். ஆகவே, தரப்பினர்களுக்கு போதிய வாய்ப்பு கொடுத்து முழுமையான விசாரணைக்கு பிறகு வழக்கை முடிவு செய்தால் தான் அதில் நியாயமான முடிவை எட்ட இயலும். எனவே, உபய தரப்பினர்களுக்கும் சமமான

வாய்ப்பளித்து முழுமையான விசாரணைக்கு பின்னர் பிறப்பிக்கப்படும் தீர்ப்பே உபயதரப்பினர்களுக்கும் நன்மை பயக்கும் என்ற சட்ட நியதியின் அடிப்படையிலும் அதுவே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்பதாலும், இவ்வழக்கில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தை செலவுத் தொகையின் பெயரில் ஈடு செய்யலாம் என்பதாலும் எதிர்மனுதாரர்கள் / வாதிகளுக்கு, மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் செலவுத் தொகையை செலுத்தும்பட்சத்தில் இம்மனுவினை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவில், மனுதாரர்கள்/பிரதிவாதிகள், எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு ரூ.1500/-ஐ வரும் 08.12.2023 தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சம் இம்மனு தானாக தள்ளுபடி செய்யப்பட்டதாக கருதப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க 08.12.2023.

இவ்வாணையுரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்ததை 2023ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 01ம் நாளான இன்று அவையறிய பகரப்பட்டது.

**(ஒப்பம்)/- N. பாரதிராஜன்**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

- இல்லை. -

**(ஒப்பம்)/- N. பாரதிராஜன்**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---

**அசல் ஆணையுரை**
ஐ.ஏ.06/2023 இன் ஓ.எஸ்.246/2017
நாள் : 01.12.2023
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
பொள்ளாச்சி.

---